Now to find if this star of the Ayadi number matches with the birth star of the mistress, we have to start the count from the star of the mistress to the star of the number. This process is termed as **'Tarapalan'** meaning 'the effect of Nakshatra'. When the count happens to be 2, 4, 6, 8 or 9, it is considered good. The tables below will flash more clarity on the four aspects of amsam, yoni, varam and nakshatra.

If the birth star of the mistress is Uttiradam, then the star of the Ayadi number 57, Sadayam, falls 4th from Uttiradam which has Kshemam as the paryaaya benefit (see table). Thus 57 can be taken for the construction of the residence. With this we conclude the elaborate procedure of 'Shadayadi' calculation.

Yoni Table (Direction)	**Amsa Table**
1. Dwajam (flag staff)	1. Taskara - Thief
2. Dhoomam (Smoke)	2. Bhukti - Enjoyment
3. Simham (Lion)	3. Sakti - Power
4. Svanam (Dog)	4. Dhanyam- Blessed
5. Vrushabha (Bull)	5. Nrupan - King
6. Kharam (Ass)	6. Kleepan - Ali (Neuter)
7. Gajam (Elephant)	7. Nirbheeti - Fearlessness
8. Kakam (Crow)	8. Daridran - Poor
	9. Preshiyan - Servant[1]
Note: 1,3,5,7 are good	Note: 2,3,4,5,7,9 are good

Varam Table
1. Sunday
2. Monday
3. Tuesday
4. Wednesday
5. Thursday
6. Friday
7. Saturday
Note: 1,2,4,5,6 are good.

1. In Sakaladhikara this aspect is stated as acceptable.

Nakshatra Table Classified under 3 paryāyas (groups)			
	1	2	3
1.	Aswini	Magham	Moolam
2.	Bharani	Pooram	Pooradam
3.	Karthiga	Uttiram	Uttiradam
4.	Rohini	Astham	Thiruvonam
5.	Mrugasirsha	Chittirai	Avittam
6.	Tiruvadirai	Swati	Sadayam
7.	Punaravasu	Visakam	Poorattadi
8.	Poosam	Anusham	Uttirattadi
9.	Ayilyam	Kettai	Revati

Paryaya Table
Paryaya Benefits - the benefits are the same for each groups of Nakshatras.
1. Janmam
2. Sampath
3. Vipath
4. Kshemam
5. Pratyaram
6. Sadhakam
7. Vadham
8. Maitram
9. Parama maitram
Note: 2,4,6,8,9 are good.

WHAT ARE THE BENEFITS DERIVED FROM ĀYĀDI CALCULATIONS?

"नृपकर्तुश्च वास्तूनां सर्वसंपत्करार्थकम् ।।
आयादिभिरुपेतं यत् मानंतच्छ्रीकरं भवेत् ।
अपेतं सर्वदोषं स्यात् तस्मादायादि संयुतम् ।।"

In the design of buildings for the ruler and the ruled, the building measures should be tested by Ayadi calculations. (This is called purified measure). This will enable them to attain prosperity and other benefits. If the measures are not purified by Ayadi test and fully arbitrary measures are used, such buildings will cause bad effects on the inhabitants.

Hence it is imperative that measures purified by Ayadi calculation alone should be made use of in the design of all kinds of buildings. So says Sage Agastya, hailing from Brahmarishi Mayan's clan, in his sacred treatise called Sakalādhikāra.

Where to apply the formula for Ayadi purification?

"ग्रामादीनां च वास्तूनां यन्मानं श्रीकरं तथा ।
तैतलानां मनुष्याणां आलयश्च तथा पुनः ।।
लिङ्गबेरादिकं चैव यानादिशयनासनम् ।
आयादीनि तु मानानां निश्चितं तत्प्रवक्ष्यते ।।"

In the design of the layouts of towns and villages, temple buildings for gods and buildings for human habitations, in the design of Shiva Linga, temple images, vehicles, bed steads and seats the Ayadi purification should be carried out.

What are all the classified yardsticks for various built forms?

"ग्रामादीनां च वास्तूनां दण्डमानेन कारयेत् ।
प्रासादश्च सभा शाला प्राकारं गोपुरं गृहम् ।।

मालिका मण्डपानां च प्रपारङ्गं तथैव च ।
हस्तमानेन संवीक्ष्य आयादीनां तु सङ्ग्रहः ॥
यानानां शयनानां च मञ्चमञ्चालिकं तथा ।
वितस्तिना विधातव्यं प्रादेशाङ्गुलकेन वा ॥
अङ्गुष्ठ तर्जनीभ्यान्तु प्रादेशाङ्गुलमिष्यते ।
गर्भस्तम्भं गृहस्तम्भं द्वारयोगस्य मानकम् ॥
मानाङ्गुलेन तत्कुर्यात् आयादीनां विशेषतः ।
लिङ्गबेरादिकं चैव बल्यर्चा विष्टरं तथा ॥
मानमात्राङ्गुलाभ्यां च देहलब्धाङ्गुलात्तु वा ।
आयाद्यंशेन वा कुर्यात् आयादीनां प्रकल्पनम् ॥
आयादि संपदर्थं च वृद्धि हार्नि तु निन्दितम् ॥"

Towns and villages should be measured by a scale called **Dandamaana** (a measure of 4 cubits equal to eleven feet). Temple buildings, halls, pavilions, perambulatory passages in a temple, gopurams, residential buildings, mansions, theatres, open sheds have to be measured by Hasta Maana of 2'.9" long.

Vehicles, bed steads, palanquin, portable cages have to be measured by a unit called **Vitasti** which is equal to ½ cubit, ie., 1'.4½" measures or these model forms may be measured by a unit called Praadesam which is a unit of length from thumb to index finger when stretched out.

In addition to that, the pillar of the main sanctum of a temple, pillar of the houses and also door frame shall be measured by Mānāngula which is equal to $1^{3}/_{8}$".

Finally, Lingam, idols and metal icons meant for worship, Mānāngula measure or Māthrāngula measure or Dehalabtāngula measure may be used. Mānāngula measure is the unit derived from the iconic form

based on Taala Maana as applied to the design of idols. Ayadi numbers with good benefits confer wealth and prosperity and such of the Ayadi numbers as are productive of miserable effects shall be prohibited. These are all certain units of measure recommended by Shastras for Ayadi purification.

In actual practice the Sthapatis have been making use of Mānāngula or Hasta measure for calculation of Ayadi number and later on converted into British Units for the sponsors or donors or the public to know of the measure.

Note:-

There are two groups of Ayadi numbers included in this booklet. The 1st group is well tested and purified which may be readily used, direct from the Ready Reckoner. The 2nd one is not so pure but when faced with space constrains, the numbers in the 2nd row can be utilised. This has been in practice with traditional designers and builders.

In addition to stars, used for a variety of purposes and contexts, there is a group of stars prescribed by Shastras for various God forms. These are used by practising Shilpis in the design of temples and images.

In case, no birth star is available for any individual, the Nāma Nakshatra of the individual can be used and Ayadi numbers selected. For selecting Ayadi measure for factories, tanks, reservoirs, towns and villages, the Nāma Nakshatra may be used. A list of Nāma Nakshatra is provided in this booklet.

JANMA NAKSHATRA - NĀMA NAKSHATRA - VAASTU NAKSHATRA

According to Indian tradition, the naming of a new born baby has been an important event in the life of the baby. The selection of a name is a process associated with the nakshatra under which the baby was born. This particular nakshatra is called **'Janma Nakshatra'** or **'Birth Star'.**

In the regular calender, consulted by the Indians, there is a table where birth stars and corresponding aksharas (syllables or letters) are furnished. From out of this, the akshara related to the nakshatra of the baby is selected and a name pleasing to the ears and easy for articulation evolved. The name so selected, is whispered into the ear of the baby and blessed by the elderly members of the family or the family Guru. Thereafter, the child carries the name throughout its life time. This kind of association of birth star with the phonetic form, represented by the akshara has been in practice from the very ancient times. This is known as **'Namakaranam'.**

In the same way, when a town or village is founded and inaugurated, an auspicious nakshatra is fixed for the event and the village or town named with the phonetic sound as the first letter of its name. For instance, if a village is established and inaugurated under the nakshatra **'Maham'**, the first letter namely **'ma' 'म' 'ம'** is taken as the initial letter, and the village named 'Mahabalipuram' or 'Madurantakam'. From this, it may be inferred that from the name of the village, the nakshatra will be 'Maham' which carries now a new name - Nama nakshatra. If from nakshatra to name and vice versa, it goes by the name of **'Vaastu nakshatra'**. Both of them, in principle, are Vaastu nakshatras. This Vaastu Nakshatra is applicable for town and villages of temples, all of them meant for the welfare of the people.

Similarly, if an individual does not have a birth star, the nama nakshatra can be ascertained from the first letter of the individual's name. (Vide table).

There is another table in this booklet containing names of deities that are installed for worship in a temple. They are called Swami Nakshatras. For popular understanding they are stated as the 'Janma Nakshatras' of the deities. If no star is available for any deity, nama nakshatra is derived and taken into consideration for matching with Ayadi nakshatra.

In Sanskrit tradition, every akshara (letter or syllable) is representative of a nakshatra (star), called 'Nama nakshatra'. Based on this concept the first letter of an individual or god form or a place (town or village) carries a nakshatra. As such, the twenty seven nakshatras are classified as follows, and indicated against each group of letters. (Vide table).

For instance, if the name of an individual is Venkatesan, வெங்கடேசன் the first akshara is வெ, Ve. This is given as வெ, வொ, க, கி in the group and at the end, the corresponding nakshatra is indicated as 'Mrigasirsha'. So, for names beginning with Ve, the nama nakshatra is Mrigasirsha. Similarly, the same nakshatra is prescribed for other letters such as வொ (Vo), க (Ka), கி (Ki) of the group. Even English names can be brought into this formula and the nama nakshatra ascertained. Take for instance, the name 'Wellesly' where sound வெ, Ve is recognised as one on par with the initial letter of Venkatesan. The Mrigasirsha suits that name. Remember, please that it is sound (phonetic sound) that matters here. All letters or aksharas collapse into OM and emerge into various letters of a language.

Still, there are certain intricacies with regard to the process of arriving at the nama nakshatra. They are not elaborated here, but can be learnt from Sanskritists or traditionalists, or from Sthapatis. The basic approach alone is discussed above.

ஆயாதி கணனம்

பதிப்பாளர் உரை

நிகழ்காலத்தில் வாஸ்து சாஸ்திரங்களையொட்டிச் செல்லும் ஏடுகளும், மேலெழுந்த வாரியான விதிகளைத் தாங்கி வரும் ஏடுகளும் விற்பனை நிலையங்களை நிறைத்து வருகின்றன. அங்ஙனம் வெளிவந்திட்ட பெரும் பகுதியான ஏடுகளையும் விளக்கப் படங்களையும் வாஸ்து வேத ஆய்வு நிறுவனம் ஊடுருவிப் பார்த்து வருகிறது. பெரும்பாலான ஏடுகளில் அடிப்படையான வாஸ்து விஞ்ஞானச் செய்திகள் சொல்லப்படவில்லை. வாஸ்து நூல்களைப் படித்து அதில் சொல்லப்பட்டிருக்கும் தொழில்நுட்பச் செய்திகளை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி வரும் கைவினைஞர் களையோ, நூலறி புலவர் களையோ கேட்டறிந்து விளக்கமுற்றிருக்கின்றன என்று சொல்வதற்குமில்லை. பெரும்பாலும் அவை செவிவழிச் செய்திகள் போல நடை முறைப் பழக்க வழக்கங்களை மிகைப்படுத்தி எழுதப் பட்டிருப்பதாகவே தோன்றுகின்றன. இதனால் வாஸ்து இலக்கணப்படி வீடு கட்டிட விழைவோர் ஐயப்படுகின்றனர். கட்டியபின் பல இடர்பாடுகளைச் சந்தித்து விசனிக்கின்றனர். விஞ்ஞானக் கணக்கியலைக் கொண்டதும் உன்னதமான வாஸ்து விதிகள் கொண்டதுமான தொல் மரபிற்கே அவப் பெயரை கொணர்வது போல் நினைக்கச் செய்கிறது. இந்த நிலை ஏன்?

இந்த வாஸ்து சாஸ்திரத்தைப் பொருத்தவரை, இலக்கியத்தை வைத்து இலக்கணம் எழுதினாற் போலல்லாமல், இலக்கணத்தை வைத்து இலக்கியம் இயற்றுவது போல, ஓர் அரிய விஞ்ஞானத்தை ஒவ்வொரு வரியிலும் வைத்து, படைத்தற்குரிய விஷயங்களையே பேசுகின்றது. அதாவது, இக்கால மரபுப்படி (contemporary tradition) Technologyயை வைத்து Science-ஐ சொல்லுவது போலல்லாமல், Science-ஐ வைத்து Technology-ஐ சொல்லும் முறை வாஸ்து சாஸ்திர முறையாக மிளிர்கிறது. இஃதே உண்மை. வாஸ்து

சாஸ்திரத்தின் இந்தவொரு நிலையை விஷயமறிந்தோர் ஒப்புக்கொள்வர். இந்த நுட்பத்தை எந்தவொரு நூலாசிரியரும் மொழிபெயர்ப் பாசிரியரும் தமது நூல்களில் சொல்லவில்லை. அதாவது, தொழில் நுட்பத்துக்குள் விஞ்ஞானத்தை நுழைத்து - அதனை மறை பொருளாக வைத்துப் பேசுகின்றன வாஸ்து நூல்கள் எனலாம். அதாவது, விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் தனித் தனியாகப் பிரித்துக் காட்டிடவில்லை. காரணம் யாதெனில், விஞ்ஞானத்தின் பயனை அது வழங்கும் சுகத்தை அனுபவிக்கச் செய்வதே தொழில்நுட்பவியலின் (technology) அடிப்படை நோக்கமாக இருந்து விட்டதினால், நமது சாஸ்திரங்கள் விஞ்ஞான விஷயத்தை தனிமைப்படுத்திப் பேசாது போயின.

மேலும், நாட்டிலே தொடர்ந்து வந்திட்ட சாஸ்திரங்கள் சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டு விட்டதனால் சமஸ்கிருத மொழி தெரியாதோர் விஞ்ஞானத் தத்துவத்தை தெரிந்துக் கொள்ள இயலவில்லை. சம்ஸ்கிருதப் புலமை பெற்றோர் சொல்லவுமில்லை, தொட்டுக் காட்டிடவுமில்லை. தொழில் நுட்பங்களை (technical matters) கண்டு கொள்ளவுமில்லை. அதோடு வழி வழியாக இத்துறையில் செயலாற்றி வந்தோர் இவ்விஷயங்களை வெளியே பேசிடவு மில்லை, அவற்றைக் காது கொடுத்து கேட்போரும் இல்லை. சொற் கட்டுகளுக்கு, சொல்லோவியங்களுக்கு, கவிதைகளுக்கு இலக்கணம் கண்டது போல கட்டிடக் கலைக்குமொரு இலக்கணம் (grammar of visual forms) இயற்றிக் கொடுத்த மரபு இந்திய மரபாகும் என்பது எவர்க்கும் புரியவில்லை. பெரும்பாலும் நமது மரபுகள் மீது மேலை நாட்டுப் பார்வையை இக்கால நம்மவர் செலுத்தி வந்ததால் அவர்கட்கு இது புரியாது தான். புரியாமலே போய்விட்டது. இதனாலும் வாஸ்து மரபின் மீது மயக்கமும், தயக்கமும் ஏற்படலாயிற்று. இயல், இசை, நடம் என்ற முத்தமிழ் ஆகிய மூன்றும் உறுதியான இலக்கணங் கொண்ட கலைகளாக விளங்குவது போல, சிற்பம் மற்றும் கட்டிடங்கள் - exceptional - சிறப்பான இலக்கணம் கொண்டு விளங்குவதை தமிழ்நாட்டில் தான் காணலாம். எனினும் இந்த நுட்பங்களைப் பேசிட யாரும் முன்வரவில்லை. இங்ஙனம் பல நூற்றாண்டுகள் சென்று விட்ட

நிலையில், திடீரென்று வாஸ்துச் செய்திகள் இங்குமங்குமாகத் தோன்றி இப்போது உலக அளவில் பேசப்படும் சிறப்புப் பொருளாக (exceptional theme) மாறிவிட்டது. வாஸ்து எதற்காக என்று சாஸ்திரத்தைப் புரட்டி உட்புகுந்தால்,

"वास्तु शास्त्रं प्रवक्ष्यामि लोकानां हितकाम्यया ॥"

"மாந்தர் இனத்தின் சுகமிகு வாழ்க்கைக்காகவும், இலட்சியங்களை அடைவதற் காகவும் இந்த வாஸ்து சாஸ்திரத்தை விவரிக்கிறேன்" என்று வாஸ்து நூல் அதன் நோக்கத்தை அறுதியிட்டு வெளிப்படையாகச் சொல்வதைக் காணலாம். இஃது எப்படி என்று எவரும் ஆய்வு செய்திடவில்லை. இதற்குள் தான் இலக்கணமும், இலக்கியமும் அடக்கமுற்றுக் கிடக்கின்றன.

இந்த நிலையில் பல வாஸ்து விஞ்ஞான நுட்பங்களையும், ஆராய்ச்சிகளையும் செய்து, அவற்றில் பொதிந்து கிடக்கும் விஞ்ஞான-தொழில்நுட்பச் செய்திகளை **ஸ்தாபத்ய வேதம்** என்று தலைப்பிட்ட தமது ஆங்கில நூலில் டாக்டர் வை.கணபதி ஸ்தபதி அவர்கள் அண்மையில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நூலைப் பார்த்திட்ட விசுவகர்ம சிற்பிகள் வியந்து பாராட்டி ஸ்தபதி அவர்களுக்கு **'வாஸ்து வியாஸன்'** என்ற விருதொன்றைச் சென்னையில் வழங்கினார்கள். இந்த நூல் நல்லதொரு வரவேற்பை விஞ்ஞானம், தொழில்நுட்பம் பெற்ற அறிஞர் தம் உலகிலும் பெற்றிருக்கிறது. இந்த நூலை ஹவாய்த் தீவில் வாழ்ந்திட்ட ஞானியும் சிவயோகியுமான ஸ்ரீ சிவாய சுப்ரமுனிய சுவாமிகள் ஹவாயில் நிகழ்ந்த Builders conference ஒன்றில் வெளியிட்டுப் பெருமைப்படுத்தினார்கள்; ஊக்கமளித்தார்கள். **இந்து, எக்ஸ்பிரஸ்** ஆகிய பெரிய நாளிதழ்கள் பாராட்டியும் உள்ளன. அந்த ஆங்கில நூலில் பல விஞ்ஞான ரகசியங்கள் விளக்கப்பட்டிருப்பதைப் பார்த்து மேலை நாட்டினரும் நல்ல பல கருத்துக்களை சொல்லிப் பாராட்டியுமிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல நேரில் வந்து கேட்டறிந்து வாஸ்து விஞ்ஞானப் பயிற்சியும் பெற்று வருகிறார்கள்.

மேலை நாட்டினர்க்கு பயிற்சியும் போதனையும் செய்திட **"International Institute of Mayonic Science & Technology"** என்ற பெயரில் ஸ்தபதி அவர்கள் ஒரு பயிற்சி நிலையத்தையும் தோற்றுவித்து எளிய முறையில் நடத்தி வருகிறார்கள். மேலும், அறிஞர் தம் பாராட்டுச் செய்திகள் ஸ்தபதி அவர்கள் நடத்தி வரும் **வாஸ்து புருஷன்** என்ற ஆங்கில ஆராய்ச்சி இதழில் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன.

வாஸ்து சாஸ்திரங்களில் நாடு, நகரம், கோட்டை, கொற்றளம், வீடு, கோவில், கிணறு, குளம், கடவுட் படிமங்கள், ஊர்திகள் ஆகியவற்றை வடிவமைக்கும் பொழுது எந்தெந்தச் சிறப்பியல்புகளை அமைத்துச் செய்தல் வேண்டும் என்ற அடிப்படை அறிவியல் குறிப்புகள் செய்முறை விளக்கமாகக் காணக்கிடக்கின்றன. அவற்றில் இக்கால நூல்களில் வெளிவராத வாஸ்து புருஷ மண்டலம், வாஸ்து பதங்களான பிரம்மபதம், தெய்வீக பதம், மானுஷ பதம், பைசாசிக பதம் என்ற பத விந்யாஸ (space) நுட்பங்களை (significance of spiritual spaces) அதிலும் குறிப்பாக பிரம்மபிந்து, பிரம்மஸ்தானம், பிரம்மசூத்திரம் என்ற நுட்பங்களை ஸ்தபதி அவர்கள் தமது ஸ்தாபத்ய வேதம் என்ற நூலில் மிக விளக்கமாக எழுதியிருக்கிறார்கள். இவற்றுக்குரிய சிறப்புக் கருத்துக்களையும், அவற்றால் விளையும் பயன்களையும் படங்களோடு விளக்கியுமிருக்கிறார்கள்.

இந்த வரிசையில் ஆயாதி கணனம் என்ற ஓர் உன்னத கணிதவியலை சிறப்பித்து இந்தச் சிறிய ஏட்டில் விரித்துக் காட்டியிருக்கிறார்கள். ஒளி ஒலி அலைகளின் நீளத்தை எண்ணளவாகக் (wave length in numerical measure) காட்டிய விந்தையையும் அதன் விஞ்ஞான ரகசியங்களையும் அதற்கு அடிப்படையான ஓர் அபூர்வக் கணக்கியல் ஒன்றையும் காரண காரியங்களோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். இதனைத் தான் பிரம்ம ரகசியம் என்று (science of subtle energy metamorphosing into gross forms) சிற்பியர் சொல்லுகிறார்கள். இத்தகைய ரகசியங்களை முதன் முதலில் வெளிக் கொணர்ந்த, எல்லோர்க்கும் சொல்லிக் கொடுத்திட்ட ஒரேயொரு மனிதர்

டாக்டர் வை.கணபதி ஸ்தபதி அவர்கள் தான் என்றால் மிகையாகாது. அறிஞர் உலகம் அவர் காட்டிய பிரம்ம ரகசியங்களை - விஞ்ஞான நுட்பங்களை உற்றுணர்ந்து அவர்களை மனதார வாழ்த்திப் பாராட்டுவர் என்று நம்புகிறோம்.

இத்தகைய வரவேற்பைக் கண்ணுற்று, அகமகிழ்ந்து மேலும் பல விஞ்ஞான - தொழில்நுட்ப ரகசியங்களை வெளிப்படுத்திடும் ஆர்வம் ஸ்தபதியவர்களுக்கு ஏற்பட்டதின் விளைவாக இப்போது ஆயாதி கணனம் என்ற இக்கையேட்டை வெளியிடச் செய்திருக்கிறார்கள். இஃதோர் கையேடானாலும், இந்தக் கையேட்டின் முன்னுரையில் வாஸ்து விஞ்ஞான விதிகளைச் சுருக்கமாகவும், ஆணித்தரமாகவும் எழுதியிருக்கிறார்கள். இந்த ஆயாதி ரகசியத்தை எல்லோரும் அறிந்து மக்களுக்கு நல்ல நெறிகளையும், முறைகளையும் எடுத்துச் சொல்லி, கட்டிடக் கலை வல்லுநர்கள் தமது கட்டிட வடிவமைப்பில் புகுத்தி ஆரோக்கியமான கட்டிடங்களை (healthy buildings) வழங்கிட வேண்டுமாறு ஸ்தபதியவர்களோடு சேர்ந்து நாங்களும் வேண்டிக் கொள்கிறோம். இந்த வெளியீட்டுக்கு உதவி கரமாக இருந்த பொறியாளர் R.ஷண்முகவேலன், B.E., கட்டிடக் கலைஞர் ஸ்ரீமதி கிருத்திகா சந்தான கிருஷ்ணன், B.Arch., ஆகியோர்க்கும், தொகுப்பாசிரியர் வாஸ்து வியாஸன் டாக்டர் வை.கணபதி ஸ்தபதி அவர்களுக்கும், ஸ்தபதியின் வாஸ்து வேத ஆய்வு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் பொறியாளருமான - வாஸ்து நிபுணர் திரு.V.ராமமூர்த்தி, B.Sc., B.E., அவர்களுக்கும் எங்களுடைய நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறோம். தட்டச்சு செய்தளித்த திருமதி.R.ராஜலக்ஷ்மி, திரு.N.தனசேகரன் மற்றும் திரு.B.மணிகண்டன் ஆகியோர்க்கும் எங்களுடைய நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறோம்.

மேலும், சைவாகம விற்பன்னர்கள் தமது யாகசாலை நிர்மாணத்தில் ஆயாதி அளவுகளைப் பிரயோகப்படுத்துவதால், அதற்கேற்ப இந்தக் கணிதவியல் பற்றி ஆகமத்தில் குறிப்புகள் கிடைக்கின்றன. இந்தத் துறையில் உயர் ஞானம் பெற்று விளங்கும் ஆகம விற்பன்னர் டாக்டர்

எஸ்.பி.சபாரத்தினம், M.A., Ph.D., அவர்கள் இந்நூலைப் படித்து தமது பாராட்டையும் நல்கிய நிலையில், எங்கள் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நூலில் விளக்கிய கருத்துக்களையும், கணக்குகளையும் உற்று நோக்கிப் பிழைகள் வந்திடா வண்ணம் செய்த மாபெரும் பணியில் பெரும் பங்கு பெற்ற பட்டதாரி ஸ்தபதி S. சந்தான கிருஷ்ணன் B.Sc.(Temple Architecture), M.A. (Sanskrit) அவர்களுக்கு எங்களது நன்றியறிதலைச் சொல்லி மகிழ்கிறோம்.

நாங்கள் இத்தகையப் பணியைச் செய்திட ஆர்வமிக்கோராக இருக்கும் நிலையில், நிதிப்பற்றாக் குறையால் அதிக எண்ணிக்கையில் இந்த நூலைப் பதிப்பித்திட - மலிவுப் பதிப்பாக வழங்கிட - முடியவில்லை. குறைந்த பதிப்புகளே வெளிவர முடிகிறது. மேலும் விற்பனை நிலையங்களுக்கு அதிகத் தள்ளுபடியும் தர வேண்டியதுளது. இதனால் ஏட்டின் விலையை ஒரு சிறிது ஏற்றி வைக்கலாகிறது. என்றாலும் நூலின் சிறப்பையும் இன்றியமையாத் தன்மையையும் கருத்திற் கொண்டு இந்த ஏட்டை வாங்கி ஆதரவு நல்கிட வேண்டுமென கோரிக் கொள்கிறோம். நன்றி, வணக்கம்.

பொறியியல் கல்வியாளர்
திரு. இராம மூர்த்தி,
நிர்வாக இயக்குநர்,
வாஸ்து வேத ஆய்வு நிறுவனம்,
சென்னை.

இங்ஙனம்
பதிப்பாளர்கள்:
திருமதி.பொன்னி செல்வநாதன்,
திருமதி.காயத்ரி ஷண்முகவேலன்.

ஆயாதி கணனம்

(ஆதியை அதாவது கால மூலத்தை[1] ஆய்ந்து அதன் செயல் நெறிகளை உணர்ந்து, அவற்றின் பயனையும் அறுதியிட்டு வெளிப்படுத்திட்ட ஓர் அபூர்வக் கணக்கியல்)

பிரும்மரிஷி மயனின் வாஸ்து ரித்திரங்கள்

"காலக்கூறே கணக்கியலாகி
கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி"

"காலமே எவற்றுக்கும் மூலம் காலமே கோலத்தோற்றம்
காலமே ஞாலத் தோற்றம் காலமே விந்தை செய்யும்"

"காலமே ஆக்கும், காலமே காக்கும், காலமே துடைக்கும்"
"काल: सृजति भूतानि, काल: संहरति प्रजा:, सर्वे कालस्य वशगा:"

ஸ்காந்தம் - நாகரபடலம்

வாஸ்து சாஸ்திரம், சில்ப சாஸ்திரம் என்ற இரு விஞ்ஞானக் கலை நூல்கள் ஒருங்கிணைந்த நிலையில், ஸ்தாபத்ய வேதம் என்று சொல்லப் படும். அரியதொரு விஞ்ஞான நுட்பத்தை (cosmic science) அடிப் படையாகக் கொண்ட ஓர் அபூர்வ வேதம் இஃதாகும். இந்த உயரிய நிலையை வேதவியாசனின் காலத்திலேயே இந்தக் கலை நூல் பெற்றிருந்த செய்தியை வேதவியாசனின் பாகவதத்திலிருந்து தெரிய வருகிறோம். இத்தகைய தொன்மை வாய்ந்த ஸ்தாபத்ய வேதமானது பரம்பொருளின் சிருஷ்டி தத்துவத்தை (அ) சிருஷ்டி ரகசியத்தை, விஞ்ஞான வாயிலாக உலகிற்கு வெளிப்படுத்திய சிறந்ததொரு வேதமாகத் தொன்றுதொட்டு இந்தியச் சிற்பிகள் உணர்ந்து, செயலாற்றிப் போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள். இந்திய நாகரிகத்தின் மூல வேதம் இஃதெனில் மிகையன்று.

இந்த அண்டத்தில் படைத்தற் தொழில் செய்து வரும் பரம் பொருளை (Supreme Being) **'விசுவகர்மன்'** (Creator of the Universe) என்று

---

1. காலம் என்பது ஓர் மூல ஆற்றல். இதனைக் கால விசை, காலசக்தி என்றும் இதையே காளி என்றும் வாஸ்து வேதிகள் கூறுவர். காளியைத் தமது வழிபடு தெய்வமாகவும் கொள்வர். காஞ்சிபுரத்தில் இன்றுமுள காளிகோட்டமானது தொல்பழம் கோட்டமாகும். சிற்பியர்க்கு உடமையானதுமாகும். கால மூலம் என்பது காலாதீதமான மூலம் அதாவது காலமொழிந்த மூலம் (Root). மூல காலம் என்பது காலம் முதன் முதலில் தோற்றமெடுத்த நேரம் (Beginning of Cosmic Time). இந்த மூலகாலத்தைத்தான் வாஸ்து சாஸ்திரமானது கணக்கியலின் தோற்றமாகக் கொண்டு அதனை ஆய்வுக்குள்ளாக்குகிறது. மூலகாலமானது வெளிப்பட்டது முதல் இந்த ஞாலத்தில் பல தோற்றங்கள் (Material forms) உற்பத்தியாயின. இவையே உயிர்ப்பொருள்கள் (life forms) எனப்படுகின்றன. இந்தச் சக்தியை - ஆற்றலை - மூலகாலம் என்று சொல்லியதோடு விட்டுவிடாமல் இதனை 'காலமாக்கடவுள்' Time-God என்று மயன் கூறுகிறான். சம்ஸ்கிருதத்தில் இதற்கு काल ग्रहन् என்று பெயர். காலத்தைக் கண்டு அதன ஆற்றலைப் பேசிய முதல்வன் மயனே.

வேதங்கள் பேசும். இப்பணியின் ரகசியத்தை - விஞ்ஞானத்தை - தொழில் நுட்பத்தை - நெறிமுறையை இந்தியச் சிற்பிகள் தெரிந்து பல நூறு ஆண்டுகள் செயல்பட்டு வந்தமையால் படைத்தற் கடவுளின் பெயரே (விசுவகர்மன்) இவ்வினத்தவர்களுக்கு வருவதாயிற்று. இஃதொரு தொழிற் பெயர். வரலாற்றுச் சான்றும், வேதச் சான்றும் தாங்கி வரும் ஓர் அரிய பெயராகும். இப்பெயரை முதன் முதலில் பெற்றிட்டவன் தான் 'மயன்' என்பான். அருவத்தை உருவமாகக் கண்ணெதிரே காட்டியவனாகையால் தேவ தச்சன் என்றும், அசுர இனத்தில் பிறந்தவன் ஆனதால் அசுர தச்சன் என்றும் மேலும் இரு பெயர்கள் வருவதாயின. இவன் மகாகவி என்றும் பெயர் பெற்றவனாவன். தனது வேத நூல்களைத் (Technical Literature) தமிழ்ப் பாக்களாக வழங்கியிருக்கிறான். இந்தப் பாக்கள் ஒருவகையானச் சந்தமும், சொற்கட்டுகளும், சொல்நயங்களும் கொண்டு விளங்குவதால் இவனது தமிழை மயத்தமிழ் என்று மயனே சொல்லுகிறான். மயனுக்கு விசுவகர்மப் பட்டமளித் தவன் யாரெனில், வேதங்களைத் தொகுத்தளித்த வேதவியாசனே தான்.

தமிழ் மற்றும் சம்ஸ்கிருத இலக்கியங்களும் இதனை உறுதி செய்திருக்கின்றன. இராமாயண மகாகாவியத்தில் வால்மீகி மகரிஷியானவர், "मयो नाम महातेजा मायावी वानरर्षिपभ" என்று வருணித்து மயனை விஞ்ஞானி என்றும் விந்தை பல செய்திட்ட கைவினைஞன் என்றும் சிறப்பித்துப் பேசுகிறார்.

மகாபாரதத்தில் வேதவியாசன், மயனை விசுவகர்மன் என்றும், மகாகவி என்றும் அறிமுகப்படுத்துகிறான். "अहंहि विश्वकर्मा वै दानवानां महाकविः" இதைப் போல, கேரள நாட்டு இளவரசனான இளங்கோவடிகள் தனது சிலப்பதிகாரக் காப்பியத்தில் மயனின் கைவினைத் திறத்தைக் குறிப்பிட்டு தமிழகத் தொழில் நுட்ப மரபை இந்திய நாட்டுக்குத் தந்தவன் (tradition builder) மயன் என்று உச்சிமேல் வைத்து மெச்சுகிறார்.

"நுண்வினைக் கம்மியர் காணா மரபின மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்" - இங்ஙனம், இளங்கோவடிகள் தனது காப்பியத்தில் கல்வெட்டென உறுதி செய்துள்ளார். இதுமட்டுமல்ல, பிற சங்க இலக்கியங்களிலும், புராண இலக்கியங்களிலும், ஆகம நூல்களிலும் மயன் பெயரே பல இடங்களில் வருவதையும் பார்க்கலாம். சுருக்கிச் சொன்னால், இந்தியத் துணைக் கண்டத்தில் இன்று பேசப்பட்டு வரும் வாஸ்து நுட்பங்களுக்கு இவனே மூலாசிரியன் ஆவன். இவன் யாத்த மூல நூல்களில் ஒன்று தான் **"ஐந்திறம்"** என்றும் இதன் விரிவாக்கம் தான் **"பிரணவ வேதம்"** என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இவன் பெயரில் உள்ள **மயமதமும், சூரிய சித்தாந்தமும்** யாவரும் அறிந்ததே.

தமிழ்நாடு அரசு 1986 ஆம் ஆண்டு வாக்கில் தொழில்நுட்ப

இயக்ககத்தின் மூலம் **ஐந்திறத்தை** அச்சேற்றி வெளியிட்டது. மயன் இயற்றிய **பிரணவ வேதத்தை** (ஓம் மறை) எனது வாஸ்து வேத ஆய்வு நிறுவனம் விரைவில் வெளியிடவிருக்கிறது. இவ்விரண்டும் சங்ககாலத்தமிழ் நூல்கள் ஆகும். அவை, முழுக்க முழுக்க பிரபஞ்ச விஞ்ஞானத்தையே சூத்திரங்களாகவும், விரிவுரை நூல்களாகவும் கொண்டு (cosmic science) விளங்குகின்றன. கடந்த 20 ஆண்டுகளாக இவ்விரண்டும் ஆய்வுக்குள்ளாகி பல கருத்தரங்குகளிலும் வாஸ்துப் பட்டறைகளிலும் ஸ்தபதியால் விளக்கமுற்று வருகின்றன. **"ஐந்திறத்தை"** டாக்டர் எஸ்.பி.சபாரத்தினம் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திட்டுத் தந்ததை வாஸ்து வேத ஆய்வு நிறுவனம் 1997ல் வெளியிட்டுமுளது. அவை ஆய்வர்களின் பாராட்டும் பெற்றுள்ளன.

சிருஷ்டி என்று சொல்லும் பொழுது அருவ நிலையில் இருக்கும் பரம்பொருளானது உருவ நிலைக்கு மாறி நிற்கும் நிலையைக் குறிப்பதாகும். அதாவது சூக்ஷமத்திலிருந்து ஸ்தூலப் பொருள்கள் எங்ஙனம் தோன்றுகின்றன (அ) உருமாற்றம் கொள்கின்றன என்பதை வெறும் விஞ்ஞானமாகவே சொல்லிக் கொண்டிராமல் அருவத்தை நம்முடைய கண்முன் நிறுத்தி, காட்சிப் பொருளாக்கி அவற்றின் பயன்களையும் துய்த்திட நெறிமுறை - வழிமுறை - இலக்கணம் வகுத்துத் தந்த மகத்தானதொரு தொழில்நுட்ப வேதமாகவும் (Technological scripture) **ஸ்தாபத்ய வேதம்** மிளிர்கிறது.

இந்த நில உலகையும், அதைச் சூழ்ந்துள்ள அண்டங்களையும், ஸ்தாபத்ய வேதம் காட்டிய சிருஷ்டி தத்துவத்தை அடிப்படையாக வைத்து, அவற்றின் மூலத்தையே கண்டு தேர்ந்து, அந்த மூலத்தின் செயல்நெறிகளைக் கண்டறிந்து, அந்தச் செயல்நெறி வாயிலாக இந்த நிலஉலகில் மக்கள் நலம் குறித்து பல்வேறு படைப்புகளைச் செய்து வருபவர்கள்தான் இந்த நாட்டுச் சிற்பிகள் என்றால் அது மிகையாகாது. ஒரு காலத்தில் கடலென பெருக்கமுற்று விளங்கிய, மக்கள் நலத் தொண்டு செய்த இவர்கள் இன்று கடுகெனச் சிறுத்துக் கிடக்கிறார்கள்.

இந்த விஞ்ஞானமானது உலக மக்கள் அனைவரையும் ஒரு மூலத் திலிருந்து கிளைத்திட்ட கூறுகளாக - பிறவிகளாகக் கண்டு தேர்ந்து அதற்கான ஒரு கணக்கியலையும் கண்டுபிடித்து எல்லோர்க்கும் ஒத்துப் போகக்கூடிய பல அரிய உருப் பொருள்களை பல ஆயிரம் ஆண்டுகளாக வழங்கி வந்திருக்கின்றது. அதில் அடங்கியப் பொருள்கள் தான், நமது கோயில்கள், கோயில்களில் வைத்து வழிபடும் படிமங்கள், விடுகள், மாளிகைகள், கோட்டைகள், நீர் நிலைகள் மற்றும் நாடு நகரங்கள் ஆகியவையாகும். இவ்விடங்களில் சுகம் காண, இன்பம் துய்க்க, அமைதி கலந்த வாழ்க்கை நடத்திட, இவற்றின் மூலமாக ஆன்மபலம் பெற்றிட இந்த ஸ்தாபத்ய வேதம் முன்னின்று இந்திய கலாச்சாரத்திற்கே வித்தாக இருந்து, மரமாக வளர்ந்து, காய்கனிகளைத் தந்ததை, இந்த நாட்டின் வரலாறு காட்டிடும். இத்தகைய பணிகளினால் ஏற்படும் நன்மையைப் பெறுவதற்கென ஒரு கணக்கியலை இந்த

ஸ்தாபத்ய வேதம் கொண்டுளது. இதையே ஆயாதி கணிதம் என்றும், ஆயாதி ரகசியம் என்றும் அதன் செய்முறையை ஆயாதி கணனம் என்றும் இந்த நாட்டுச் சிற்பிகள் சொல்லி வருகின்றனர். இதுவே இந்த ஏட்டின் தலைப்பாக வருகிறது.

வாஸ்து மற்றும் **வாஸ்து சாஸ்திரம்** என்ற சொற்கள் இன்று உலகளாவி வருகின்ற சொற்களாகும். இந்தச் சொற்களுக்கு அப்பால் அதையொட்டிய மேலும் ஒரு சொல் உண்டு. அது **வஸ்து** என்று சொல்லப்படும்.

அந்த மேற் சொன்ன வஸ்து, வாஸ்து என்ற சொற்களை தமிழ்க்கலை மரபானது **நுண்பொருள்** என்றும் **திண் பொருள்**[1] (பருப்பொருள்) என்றும் - சுருக்கமாக எல்லாம் பொருளே என்றும் சொல்கின்றது. ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமானால், இவற்றை Subtle substance என்றும் Gross substance என்றும் சொல்லலாம். இதனையே Matter என்று பொதுப் பெயரிட்டு நுட்பத்தை Subtle Matter என்றும் திட்பத்தை Gross Matter என்றும் சொல்வதுண்டு. இதனை மேலும் சிறிது நுணுக்கமாக நுண்பொருளை Energy என்றும் திண்பொருளை Matter என்றும் இக்கால விஞ்ஞானம் கண்டு சொல்லியிருக்கிறது. மேலே சொன்னவற்றையெல்லாம் உற்று நோக்கினால், இக்கால விஞ்ஞானமும் தொல்பழம் விஞ்ஞானமும் ஒன்றித்துப் போவதை உணர முடிகிறதல்லவா! இஃதே உண்மை!

இத்தகைய வஸ்து வாஸ்து என்ற சொற்களை வாஸ்து சாஸ்திரமானது தன்னகத்தே கொண்டு வஸ்துவே வாஸ்து வாகிறது அதாவது நுண்பொருளே திண் பொருளாக உருமாற்றம் கொள்கிறது என்று கண்டு தேர்ந்துளது. இக்கூற்றை ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமானால் Energyயே Matter ஆக உருமாறுகிறது எனலாம். இக்கூற்றை மேலும் உற்று நோக்கினால் Energyயில் Matter-ம் Matter-ல் Energy-யும் உள்ளுறைவதை உற்றறியலாம். இதனைப் பேராசிரியர் ஐன்ஸ்டீன் என்ற நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி Energy-யே Matter என்றும் Matter-றே Energy என்றும் உற்று நோக்கி $E=mc^2$ என்ற ஓர் அரிய சூத்திரத்தை வழங்கியுள்ளார். இங்கே E என்பது bodiless energy மற்றும் mc^2 என்பது embodied energy ஆகுமன்றோ! மேற்கண்ட செய்திகளையெல்லாம் ஒட்டு மொத்தமாக உற்று நோக்கினால், "நுண்

1. வஸ்து - நுண்பொருள், வாஸ்து - திண்பொருள்.

பொருளானது பருப்பொருளாக திரிபுறு கிறது" என்றும் **பருப்பொருளே நுண் பொருளாக உருமாற்றம் கொள்கிறது** என்றும் அறுதி யிட்டுச் சொல்லலாம். மேலும் சுருக்கிச் சொன்னால் அருவமே (invisible matter) உருவமாகத் (visible matter) திரிபுறுகிறது, என்பது இந்திய விஞ்ஞானத் தின் உச்சத் தேற்றமாகிறது. (காண்க அகஸ்திய சகளாதிகாரம்). இதனால் வாஸ்து சாஸ்திரமானது வேதம் எனப்பட்டு வாஸ்து வேதமென்றும் ஸ்தாபத்ய வேதமென்றும் மரபில் வழங்கப்படுவதாயிற்று. இந்த வேதத்தை அன்றைய இந்திய நாட்டு மாமன்னர்கள் உற்றுணர்ந்து அதனை உச்சி மீது வைத்தும் போற்றுவாராயினர். இதனால், எண்ணிலடங்கா ஆலயங் களைக் கட்டு வித்தனர். சிற்பிகளைப் போற்றித் தொடர் ஆதரவும் நல்கினர். இப்படித் தான் வாஸ்து சாஸ்திரம் ஒரு விஞ்ஞான உண்மையை அடிப்படையாக வைத்துக் கொண்டு வாஸ்துத் தொழில் நுட்பம் ஒன்றைத் தோற்றுவித்திருக்கிறது. இங்ஙனம் இந்த வாஸ்து நுட்பங்கள் இந்தியரிடையே பரவி செல்வாக்குப் பெற்று மக்கள் சேவை செய்து கிட்டத் தட்ட பத்தாயிரம் ஆண்டுகள் கடந்து வந்து விட்டன.

வஸ்துவான நுண்பொருள் தான் அண்டபிண்டங்களாக உருமாறுகின்றது என்றதொரு உறுதியான தேற்றம் உருப் பெற்றிட்ட நிலையில் இந்த அண்ட பிண்டங்கள் ஆகாசத்தில் (விண்பொருள்) ஒரு நெறிக்கு உட்பட்டுத் தோன்றி, வளர்ந்து, மறைந்து வருகின்றன என்று உற்றுணரப்படுவதாயின. இதற்கெல்லாம் மூலப் பொருளாய் இருப்பது வஸ்து எனப் பட்டது. இதனால் உள்ளுணர்வு, உள் ளொளி, ஒளிவெளி, வெளியொளி என்று தமிழ் மரபில் பல கலைச் சொற்களாகத் தோன்றுவதுமாயின **"அண்ட மூலமாய்ப் பிண்ட மூலமாய்க் கொண்டிலங்கு ஒளி வெளியென"** என்று அறுதியிட்டுச் சொன் னவன் தான் பிரும்மரிஷி மயன் என்பான். இதுவே consciousness என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகிறது. Consciousness, awareness என்பதெல்லாம் matter தான் என்பதும் ஒரு விஞ்ஞானக் கூற்றே. இது தான் end of knowledge என்றும் சொல்லப் படுவதாயிற்று.

இந்த வஸ்துவின் மாற்றுருவையே சிற்பியர்கள் வாஸ்து என்று கொள்வாரா யினர். இதனையொட்டி **ஓம் விராட் விஸ்வபிரம்மனே நமக** என்ற ஒளி வெளியை மூலமாகக் கொண்ட ஒலிமய மூல மந்திரம் ஒன்றை தொன்மைக் காலத்தி லிருந்து இன்று வரை சிற்பியர் வழக் காற்றில் வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், வஸ்து-வாஸ்துவின்

குணங்களை ஆய்ந்து பார்த்ததில் இந்த வஸ்து ஒரு புள்ளியில் (பிந்து) அடங்கிய நிலையில் அதுவே உணர்வுற்று, வெடித்து, ஆற்றல் அலைகளை வெளிப்படுத்தி வருகின்றது என்றும் கண்டு தேர்ந்து வியந்தனர். இப்புள்ளிக்குத்தான் **விண் கரு** என்றும், **விண் அணு** என்றும் **ஓம்** என்றும் **ஓங்காரம்** என்றும் பெயரிடுவாராயினர். இதனைக் கண்டு சொன்ன - வாஸ்து விஞ்ஞானியாய்த் திகழ்ந்த - பிரம்மரிஷி மயன் என்பான் மேலும் கூறுகையில், இயல்பில் - மூல நிலையில் இத்தகைய அலைகள் சதுர வடிவினதாகத் தோன்றி, விரிந்து பல்லடுக்கு அலைகளாக (concentric belts) ஆவதையும் கண்டு தேர்ந்து சொன்னான்[1]. மூல சக்தியாக அதாவது மூலப்பொருளாக - ஒரு புள்ளியாய் - ஓர் அணுவாய் - இருந்து அடிப்படையில் சதுர வடிவினதாயும் (two dimensional) கனசதுர தோற்றமுடையதாகவும் (tri dimensional) இருக்கிறது என்றும் அதையே சிற்றவை (microbode)[2] என்றும் சொன்னான் மயன். மேலும் இந்தச் சிற்றவை கனசதுர வடிவ நிலையில் மேலே குறிப்பிட்டவாறு கரு என்றும் விண்கரு என்றும் சொல்லப் படுவதாயிற்று[3]. இந்தக் கருவல்லவா உண்மையில் உரு ஆகிறது?....

எனவே, ஆகாசத்தில் இத்தகைய ஆற்றலேமயமான உயிர்ப்புடைய கனசதுர அணுக்கள் யாங்கணும் நீக்கமற நிறைந் திருப்பதாக வாஸ்து சாஸ்திரம் தெளிந்து இந்த மூலத்தை - இந்த அணுவை - மூல அலகாகக் கொண்டு (basic unit of measure) அதன் விரிவுகளை - ஆக்கங்களை அங்குலம், தாளம், முழம் என்ற பல்வேறு பெயருடைய அளவு கோல்களை உருவாக்கி இந்த அளவுகளைக் கொண்டே மாந்தர் வாழும் கட்டிடங்களையும், கிராமங்களையும், நகரங்களையும், கோயில் கருவறைகளையும், கோயில் விரிவுகளையும் அளவிட்டுச் செய்து வருவதாயிற்று. இத்தகைய கட்டுக்குள் அடங்கிய இடங்களில் (built space), இயற்கையின் ஆற்றல் நிரம்பி அதன்

---

1. இதற்குத்தான் வாஸ்து புருஷ மண்டலம் என்றும் ஞாலமா நெறி என்றும் காலமா நெறி என்றும் பெயராயின. Primal order of the universe - law of Nature என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவதாயிற்று.
2. இச்சிற்றவையே சிற்றம்பலமாகி இறுதியில் சிதம்பரமாயிற்று. இது தான் quantum எனப்படுகிறதோ!
3. இதுவே ஞாலத்தின் மூலநிலை - மூலக் கருநிலை - ஓம் நிலை ஆகும். அதாவது Primal manifest form of the unmanifest என்பதாகிறதல்லவா? இஃதொரு பேருண்மை. இதற்கு அப்பால் ஏதுமில்லை. எனவே இதனைக் கடவுளின் மூல வடிவம் என்று கொள்ளலாம் - கொள்வதுமாயிற்று. இதுவே கோயில் கட்டுமான மரபில் கருவறையாயிற்று. இந்த அடிப்படையிற்றான் "**கோயில் கட்டிடத்தையே கடவுளாகக் கொண்டு பூசை செய்திடுக**" என்று ஓர் உபநிஷதம் கூறுவதாயிற்று. "**प्रासादं पुरुषं मत्वा पूजयेत् मन्त्रवित्तमः**" என்பது அந்த உபநிஷத் வாக்கியமாகும். (காண்க சில்பரத்னம் மற்றும் ஸ்கந்தோபநிஷத்).

தாக்கத்தால் மனித வாழ்வினை வளப் படுத்துகிறது என்றும் அறியலாயிற்று. எனவே தான், வாஸ்து விதிகளுக்கிணங்க இயற்றப்படும் கட்டிடங்களுக்குள் துடிப்பு அலைகள் அடர்ந்துள்ளன என்று விஞ்ஞான ரீதியாகக் கொண்டு இந்தச் சூழ்நிலையை பிற்காலத் தில் **சான்னித்யம்** (உயிர்ப்பு) நிறைந்த இடம் என்று சொல்வதாயிற்று. எனவே வீடு, கோயில், நாடு, நகரம் எல்லாம் சான்னித்யம் நிறைந்த இடமாக, இந்தியக் கட்டிடக் கலை மரபில் கொண்டு இதனை மூல விஞ்ஞானமாக பல ஆயிரம் ஆண்டுகள் அனுபவிக்கப் பெற்று - உறுதி பெற்று - இடைக்காலத்தில் தொய்வுற்று, மீண்டும் இப்போது தோன்றி உலகளாவிப் பரவி வருகின்றது. இஃது ஒரு மூல ஆற்றலின் (இதனையே ஆதிபராசக்தி - ஆதி மூலம் என்கிறோம்) செயல்முறை யாதலால் இஃது அழிவுறா நிலை எய்து வதாயிற்று.

அத்தகைய மூலப் பொருளை ஆதி என்று சுருக்கிச் சொல்வது மரபு. இந்த ஆதி என்ற சொல் தமிழ் மொழிக்கும், சமஸ் கிருத மொழிக்கும் பொதுவான சொல் லாகும். இதனை ஆய்ந்து மூல அளவைக் கண்டு பிடிக்கும் ஒரு இரகசியத்தைத் தொன்று தொட்டு வாஸ்து மரபில் ஒழுகி வந்த நிலையில், இதற்கு **ஆதியை ஆய்தல்** என்று மயன் வழி வந்திட்ட சிற்பியர் பொருள் கொள்வார்கள். இதனைத் திருப்பி வாசித்து ஆயம்+ஆதி என்றும் சொல்லும் போது **"ஆயம் முதலிய"** என்று பொருள் கொண்டு விரித்துப் பேசி, **ஆயாதி** எனப்பட லாயிற்று. முன்பு சொன்னது விஞ்ஞானம் பிறகு சொல்லியது தொழில் நுட்பம். தொழில் நுட்பம் வாயிலாகத் தானே மக்கட்கு பயன் தருகிறது விஞ்ஞானம்!

மயனும் மய வழிச் சிற்பிகளும் ஆயத்தை வரவு என்றும் இதனை தொடர்ந்து வரும் பிறவற்றையும் சேர்த்து **"ஆயம் முதலியன"** என்ற பொருளில் **ஆயாதி** என்று சொல்லி வருவாராயினர்.

இந்த மூலத்தின் சக்தி அலைகளை (Energy waves) தொடக்க நிலையில் சதுர வடிவினதாகக் கண்டு அச்சதுரத்தின் மூலச் சுற்றளவை கணக்கிட்டு அதனைக் கட்டிடத்தின் சுற்றளவாகக் கொண்டு (wave length)[1] அத்தகைய நீள அளவுகளை உணர் வளவுகளாகக் கொண்டு, அத்தகைய அளவுகளை நன்மை தரும் அளவுகள்

1. ஆயம் என்றால் நீளம் என்று ஒரு பொருளுமுண்டு. எனவே wave length என்று நாம் இன்று சொல்லி வருவதும் இங்கே பொருத்தமுறுகிறது. இதனைச் சதுரமாகக் கொண்டால் அதன் நாலில் ஒரு பாகம் (கட்டிட அகலம்) ஒரு மூல அளவாகக் கொள்வதாக வாஸ்துத் தொழில் நெறிமுறை கற்றோர் அறிவர். இதனாலும் ஆயாதி என்ற சொல் **"ஆயம் முதலிய"** என்ற சொல்லாக்கத்தில் இருப்பதை உற்றுணர்க.

என்றும், தீமை தரும் அளவுகள் என்றும் வகுத்துக் கொண்டு நன்மை தரும் அளவைக் கணித்தறிந்து, மேற்சொன்ன அளவுகளைக் கட்டிடத்தின் மூல அளவாக நிர்ணயித்து, மூலத்தின் பிரதிரூபங்களாக (replica, mini universeஆக) இந்த நில உலகில் அமைதியும், இன்பமும் பெறுவதற்கான கட்டிட அளவுகளாகக் கையாண்டு வருவதாயிற்று. எல்லா அளவுகளும் நன்மை தருவதாக அமையா. ஒரு சில அளவுகளே நன்மை தரும் என்றும் அங்ஙனம் ஆய்ந்து பார்த்த நிலையில், நன்மை தரும் அளவுகளைத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள் பண்டை வாஸ்து விஞ்ஞானிகள். இந்த அளவுகளை **"எண்ணால்"** (in numbers) குறிப்பிடுவது ஒரு விஞ்ஞான - கணக்கியல் வழக்கமாகும்.

இத்தகைய **"எண்-தொகுப்பு"** (Ready reckoner) ஒரு காலத்தில் ஒவ்வொரு சிற்பியிடமும் இருந்தது. இத்தொகுப்பை சிற்பியர் எப்போதும் கையில் வைத்திருக்கும் கையேட்டில் பதிந்து வைத்திருப்பார்கள். நவயுகச் சிற்பியர்களுக்கும் இவை கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்தத் தொகுப்பை **வாஸ்து வேத ஆய்வு நிறுவனம்** இப்போது வெளிப்படுத்துகிறது. இதனை, வாஸ்துக் கலையில் பயிற்சி பெற்றோர் இதற்கென வகுத்துக் கொண்ட செயல் முறைப்படி கணித்து, கட்டிடங்களுக்கும் மற்ற பொருள்களுக்கும் அளவு கொண்டு மக்கள் வாழ்க்கையில் அமைதியும் இன்பமும் சேர்த்திட வேண்டுமென கோரிக் கொள்கிறது. இதனைத் தான் **வாஸ்து இரகசியம்** என்று தொல்பழம் சிற்பியர் சொல்லி இதனை உயிரெனக் காத்து வருவாராயினர். இன்று இது பொதுச் சொத்தாக ஆக்கப்படுவதை உற்றறிக. மகிழ்ந்திடுக.

இந்தத் தொகுப்பை எப்படி உபயோகப்படுத்துவதென்பதை **வாஸ்து வேத ஆய்வு நிறுவனத்தின்** மூலம் பயிற்சி பெற்ற இக்காலக் கட்டிடக் கலை வல்லுநர்கள் ஒழுகிடத் தக்கதாய் அச்சேற்றி வெளியிட்டு இருப்பதை அன்புடனும் பெருமிதத்துடனும் ஏற்பர் என்று **வாஸ்து வேத ஆய்வு நிறுவனம்** எதிர்பார்க்கிறது. இதனைத் தெரிந்தோர் தவறாது செயல்படுத்தி அனைத்துலக மக்கட்கும் அமைதியும் இன்பமும் கிடைக்கச் செய்திடுவர் என்று இந்த நிறுவனம் நம்புகிறது. இதனைக் கையாளுவதற்கேற்ற செய்முறையானது படத்துடன் இந்தச் சிறு ஏட்டில் விளக்கமுறுகிறது.

இது பற்றிய ஒரு வானவியல் கருத்தை இங்கே சொல்லிட விரும்பலாகிறது.

ஒவ்வொரு உயிரும் உடல் தாங்கி வெளியுலகில் பிறவி எடுக்கும் நிலையில்

ஒரு நட்சத்திரத்தில் - அதன் குணநலன் களுக்கேற்ப, குணசித்திரமாகத் தோன்ற லாகிறது. இந்தக் காலக் கட்டத்தை பிறந்த நட்சத்திரம் (birth star) என்று சொல் கிறோம், கொண்டாடுகிறோம். இந்த நட்சத்திரம் 27 நட்சத்திரங்களில் ஒன்றாக இருக்கும். இந்த நட்சத்திரத்துக்கு ஒத்த எண்ணைத் தேர்ந்தெடுத்து, அதனை wave length (ஆயம்) ஆகக் கொண்டு நன்மை தீமைகளைக் கணித்தறிதலே **ஆயாதி கணனம்** என்று சொல்லப்படுகிறது. இதனை ஆயாதிப் பொருத்தம் என்றும் சொல்வதுண்டு. திருமணத்திற்கு ஆண் பெண் பொருத்தம் பார்த்தறிதலுக்கு இஃது ஒப்பாகும் என்றாலும் ஆயாதி கணன மானது நட்சத்திரப் பொருத்தம் காண்ப தோடு நின்றுவிடாமல் ஒருபடி மேற் சென்று, ஒருவனுக்கு அல்லது ஒருத்திக்கு பொருத்தமாக விருக்கும் **"எண் அளவை"** (numerical measure) இந்த ஆயாதி கணனம் கண்டு சொல்கிறது. எனவே இக்கணனம் சோதிடமென மேலெழுந்த வாரியாகத் தோன்றினாலும் இது வானவியலையும், அதன் துடிப்பலைகளையும், அதன் அளவு களையும் குறிப்பிடும் என்று இங்கே அறிவுறுத்த விரும்புகிறேன். எனவே தான் இதனை ஆயாதி ரகசியம் என்றனர் சிற்ப நூலோர்.

நமது ஆன்மத் துடிப்பலைகளுக்கு - அதாவது அகவிண்ணின் துடிப்பலை களைக் குறிப்பிடும் எண்ணும், கட்டிடத் துடிப்பலைகளின் எண்ணும் ஒத்துப் போதலை (Numbers resonate with each other என்பது பொருள்) resonate ஆவதை harmonize ஆவதை இங்கே உற்றறியலாம். இந்த அலைகள் காட்டும் எண்ணளவை frequency of vibration என்று மேலை விஞ்ஞானம் சொல்கிறதல்லவா? அதுவே தான் இது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பலாகிறது.

இந்த இரகசியக் குறிப்பை - musical vibration-ல் கண்டறிந்த Prof.Robert Lawlor என்பார் சொல்வதைக் கீழே தருகிறேன். நமது வாஸ்து விஞ்ஞான நிலையைக் கண்டறிந்த அன்னார் அதனை எத்துணை உயர்த்திப் பேசுகிறார் என்பதையும், எவ்வளவு தொன்மை வாய்ந்ததெனவும் உற்று நோக்கி பேறுவகை கொள்க.

"The fundamental nature of the material world is knowable only through its underlying patterns of wave forms".

"Both our organs of perception and the phenomenal world, we perceive of form and proportion. Therefore, when many ancient cultures chose to examine reality through the metaphors of geometry and music (music being the study of the proportional laws of sound frequency) they were already very close to the position of our most contemporary science".

"The point of view of modern 'force-field' theory and wave mechanics corresponds to

the ancient geometric - harmonic visions of universal orders as being an interwoven configuration of patterns".

Robert Lawlor quotes Bertrand Russel in this connection as saying "what we perceive as qualities of matter, are actually differences in periodicity".

— Sacred Geometry of Robert Lawlor Architect and Scientist of Australia.

இந்த wave length எனப்படுவது கட்டிடக் கலையில் கட்டிடத்தின் சுற்றள வாகவோ, அகலமாகவோ, நீளமாகவோ, உயரமாகவோ கொள்ளலாம் என்பது சாஸ்திர நடைமுறை விதியாகும். உருவங் களானால் (படிமங்கள்) அவற்றின் உயர அளவாகக் கொள்ள வேண்டும். கட்டிடங் களுக்குச் சுற்றளவாகக் கொள்வதையே நடைமுறையில் சிற்பிகள் ஒழுகி வருகிறார்கள்.

இந்த ஆயாதி கணனம், ஆயாதி எண்ணின் ஆறு சிறப்பியல்புகளை மட்டும் ஆய்ந்ததால் **ஷடாயாதி** (ஷட்-ஆறு) என்றும், பத்து இயல்புகளை ஆய்ந்தால் தசாயாதி என்றும், பதினாறு இயல்புகளை ஆய்ந்து சொன்னால் **ஷோடஸ ஆயாதி** என்றும் சொல்லப்படும். இந்தச் சிறிய ஏட்டில் **ஷடாயாதி** மட்டுமே விளக்க முறுகிறது. **ஷோடஸாயாதிக்கு** தனி யொரு ஏடு விரைவில் வெளியிட **வாஸ்து வேத ஆய்வு நிறுவனம்** திட்டமிட் டிருக்கும் நற்செய்தியை இங்கே குறிப் பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

Ready reckoner என்ற இந்த எண் தொகுப்பில் ஒவ்வொன்றும் வெறும் எண்கள்தான். என்றாலும் அவை விண் அலைகளின் எண்ணிக்கை என மரபில் கொண்டுள்ளதால் அந்த எண்களை **யவாங்குலமாகவோ, மானாங்குல மாகவோ, தாளமாகவோ, முழமாகவோ** கொண்டிடல் வேண்டும். நேரடியாக ஆங்கில அளவு கொண்டு கணித்தல் மரபன்று. அடிப்படைக் காரணம், முன் சொன்னது போல கால சக்தி அலைகளின் துடிப்பளவுகள் (cosmic vibration) ஆனதால் என்க[1].

எடுத்துக்காட்டாக, கைக்கொண்ட பொருத்தமான எண் அளவு (ஆயாதி எண்) *109* எனில் இந்த *109* ஆனது *109* யவையாக வோ, *109* அங்குலமாகவோ, *109* தாளமாக

1. இதனால் மூலகாலம் எனப்படும் இயற்கைச் சக்தியோடு சேர்ந்து வாழும் நிலை நமக்குக் கிடைக்கிற தல்லவா? "Living in harmony with subtle nature" என்று நான் விளக்கிச் சொல்லி வருகிறேன். இதுவே ஆன்மானுபவம் எனப்படும். உண்மைதானே? இதுவே பேரின்பமாகத் தமிழ்க்கலை மரபு கொள்வ தாயிற்று. (Communion with spirit). இத்தகைய ஆன்ம இன்பத்தை (spiritual pleasure) தருவது எண் (number) அல்லவா? எனவே **"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகுமென்று"** தமிழ்க் கலைமாமணிகள் எண்ணை முன்னே வைத்துப் பின்னே எழுத்தை வைத்துப் பேசுவோராயினர் என்க. **'எழுத்து'** ஓர் ஒவியம் அன்றோ! **'எண்ணும்'** (numerical form) என்றவொரு கலைச் சொல் மரபிலுண்டு.

வோ, 109 முழுமாகவோ இருக்கலாம். இதனை British unit-ல் சொல்லி மக்களுக்குப் புரியவைக்கலாம். அப்போது வரும் அளவுகள் பின்னமாக வருதலைத் தடுக்க முடியாது. ஆனால் ஆயாதி எண்கள் எல்லாம் முழு எண்களே; உற்றறிக.

ஒரு அங்குலம் என்பது $1^3/_8$" ஆங்கில 'இன்ச்' அளவுக்கு ஒப்பானது. 6 அங்குலம் (மானாங்குலம்) என்பது தாளமெனப்படு நிலையில் தாளத்தின் நீட்டல் அளவு 6x$1^3/_8$" அங்குலம் = 8¼" ஆங்கில அங்குல அளவாகிறது. இதே போல் 24 அங்குலம் (அ) 4 தாள மானது 24x$1^3/_8$" அங்குலம் = 33; 4x8¼"=33 அங்குல மாகிறது. யவாங்குல மெனப்படுவது மானாங் குலத்தின் $^1/_8$ (fractional measure o f one manangula) அளவாகும் என்க. ($1^3/_8$" ÷ 8 = $^{11}/_{64}$").

முழத்தில் தஞ்சை முழம், மதுரை முழம், சிதம்பரம் முழம் என்ற வேறுபாடு களும் உள. இது பற்றி இப்போது தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. மேலே தந்துள்ள 24 மானாங்குலம் என்ற அளவை எல்லோர்க்கும், எப்பொருளுக்கும் உரிய பொது அளவாக வாஸ்து நூல் கொண்டுளது. இதனை standard cubit/measure என்று மரபு கொண்டுளது.

வாழ்க வாஸ்து விஞ்ஞானம்.
பரவுக மயநெறி உலகமெல்லாம்.

